# பொசுங்கட்டும்
# மனுதர்மம் !




தொகுப்பாசிரியர்

கவிஞர் கலி. பூங்குன்றன்

# போசுங்கட்டும் மனுதர்மம் !

தொகுப்பாசிரியர்

கவிஞர் கலி.பூங்குன்றன்

- பெண்களை இழிவுபடுத்தும் மனுதர்மக் குப்பைகள்
- பார்ப்பனமயமாய் மனுதர்ம சுலோகங்கள்
- பாரதத்தில் பெண்ணடிமை நஞ்சுகள்
- தந்தை பெரியார் பார்வையில் மனுதர்மம்
- மனுதர்மத்தை அண்ணல் அம்பேத்கர் எரித்தது ஏன்?

திராவிடர் கழக (இயக்க) வெளியீடு

பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை – 600 007.

# நூல் குறிப்பு



அன்னை மணியம்மையார் பிறந்தநாள் (மார்ச் 10) சிறப்பு வெளியீடு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | பொசுங்கட்டும் மனுதர்மம்! |
| தொகுப்பாசிரியர் | : | கவிஞர் கலி.பூங்குன்றன் |
| பொருள் | : | பொது |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - 2017 |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 16 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை (குறைந்த அளவு) | : | ரூ.10/- |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சுக் கோப்பு | : | பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்,<br>சென்னை - 600 007. |
| அச்சிட்டோர் | : | ‘விடுதலை’ ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,<br>வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815<br>info@periyar.org \| www.dravidianbookhouse.com |

# ஏன் கொளுத்த வேண்டும் மனுதர்மத்தை?

**மனுதர்மம் - அத்யாயம் 5 - சுலோகம் 148:** பெண் சுயவிருப்பத்தில் வாழக்கூடாது. சிறுவயதில் தந்தைக் கட்டுப்பாட்டிலும், பருவ வயதில் கணவன் கட்டுப்பாட்டிலும், கணவன் இறந்தபின் பிள்ளைகள் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டும். எப்போதும் தன் விருப்பத்தில் அவள் வாழக்கூடாது.

**மனுதர்மம் - அத்யாயம் 5 - சுலோகம் 154:** கணவன் மோசமானவனாய், கொடியவனாய் இருந்தாலும், பிற பெண்களோடு உறவு கொண்டு அலைபவனாயினும், நன்னடத்தை, நற்குணம் இல்லாதவனாயினும், பத்தினிப் பெண் என்பவள் அக்கணவனையே தெய்வமாக வழிபட்டு வாழவேண்டும்!

**மனுதர்மம் - அத்யாயம் 8 - சுலோகம் 379:** கொலைத் தொழில் புரிந்த மற்ற ஜாதிக்காரர்களைத் தூக்கில் போட வேண்டும், பிராமணன் கொலைக் குற்றம் செய்வானேயானால், அவனது தலை மயிரை மொட்டையடித்தலே தண்டனையாகும்.

**மனுதர்மம் - அத்யாயம் 9 - சுலோகம் 19:** பெண்கள் பெரும்பாலும் விபசாரிகள் என்று அநேக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**மனுதர்மம் - அத்யாயம் 9 - சுலோகம் 35:** ஆணுறுப்பு, பெண்ணுறுப்பு இவற்றில் ஆணுறுப்பே உயர்ந்தது.

**மனுதர்மம் - அத்யாயம் 9 - சுலோகம் 52:** மற்றவன் மனைவியிடத்தில் மனைவியில்லாத வேறொருவன் உடலுறவு கொண்டு பிள்ளை பெறலாம்!

**மனுதர்மம் - அத்யாயம் 9 - சுலோகம் 60:** கணவனை இழந்த பெண்ணை ஒரு ஆண் தன் உடல் முழுக்க நெய்யைப் பூசிக்கொண்டு, இரவில், இருட்டில் உடலுறவு கொண்டு பிள்ளை பெறலாம்!

**மனுதர்மம் - அத்யாயம் 9 - சுலோகம் 78:** கணவன் சூதாடுகிறவனாய் இருந்தாலும், குடிகாரனாயிருந்தாலும், நோயாளியாக இருந்தாலும், மனைவி அவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். இல்லையென்றால் அவளுக்கு ஆடை, அலங்காரம், படுக்கை தராமல் விலக்கி வைக்க வேண்டும்.

**மனுதர்மம் - அத்யாயம் 9 - சுலோகம் 94:** முப்பது வயது ஆண், அழகான 12 வயது பெண்ணையும், இருபத்து நான்கு வயது ஆண் எட்டு வயதுள்ள பெண்ணையும் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

**பெண்களை அடிமைப்படுத்தும், இழிவுபடுத்தும் இந்தக் கேடுகெட்ட, ஒழுக்கங்கெட்ட, மோசமான மனுதர்மத்தைக் கொளுத்த வேண்டாமா?**

**கொளுத்துவோம் வாரீர்! வாரீர்!**

# வீரத்தாய் பிறந்த நாளில் போசுங்கட்டும் மனுதர்மம் !

### மனுதர்மம் கூறும் இழிக் குப்பைகள் இங்கே... இங்கே... ஆதாரத்தோடு...

அன்னை மணியம்மையாரின் பிறந்த நாளான மார்ச் 10 ஆம் நாளில் மதுரை பொதுக்குழு (4.2.2017) தீர்மானத்தின்படி மாதர் தம்மை இழிவு செய்யும் மனுதர்ம சாத்திரம் பொசுங்கட்டும்! பொசுங்கட்டும்!!

மனுதர்மம் என்ன கூறுகிறது?

இதோ.....

### மனுதர்மம் - அத்தியாயம் 5

**சுலோகம் 147:** பாலியமாகவிருந்தாலும், யௌவனமாக இருந்தாலும், வார்த்திபமாகவிருந்தாலும் ஸ்திரிகள் தன்றன் வீடுகளிலும் தன் மனம் போனபடி ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது.

**சுலோகம் 148:** பாலியத்தில் தகப்பன் ஆஞ்ஞையிலும், யௌவனத்தில் கணவன் ஆஞ்ஞையிலும், கணவனிறந்த பின்பு பிள்ளைகள் ஆஞ்ஞையிலும் இருக்க வேண்டியதேயல்லாது ஸ்திரிகள் தன் சுவாதீனமாக ஒரு போதும் இருக்கக்கூடாது.

**சுலோகம் 154:** கணவன் துர்ராச்சாரமுள்ளவனாகவிருந்தாலும், அந்நிய ஸ்திரி லோலனாயிருந்தாலும், நற்குணமில்லா தவனாயிருந்தாலும் பதிவிரதையான ஸ்திரியானவள் அவனை தெய்வத்தைப் போற் பூசிக்க வேண்டியது.

**சுலோகம் 162:** ஸ்திரிக்குத் தன் கணவனைவிட மற்றொருவனால் உண்டாக்கப்பட்ட பிள்ளையும் சாஸ்திரத்தினாலொப்புக் கொள்ளப்பட்ட பிள்ளையன்று. உண்டு பண்ணுகிறவனுக்கும் உபயோகமில்லை. பதிவிரதா ஸ்திரிகளுக்கு இரண்டாவது விவாகமும் ஒரு சாஸ்த்திரத்திலுஞ் சொல்லப்படவில்லை.

**சுலோகம் 163:** தாழ்ந்தவனான தன் புருஷனை நீக்கி உயர்ந்தவனான மற்றொருவனை எந்த ஸ்திரியடைகிறாளோ அவள் நிந்திக்கப்படுவாள். மற்றொருவனோடு சேர்ந்தவளென்றுஞ் சொல்லப்படுகிறாள். ஒருவராலும் கொண்டாடப்பட மாட்டாள்.

**சுலோகம் 164:** ஸ்திரி விபச்சாரஞ் செய்கிறதினால் உலகத்தில் நிந்திக்கப்படுகிறதுமல்லாமல் இறந்த பின் குள்ளநரியாகவும் பிறந்து வெண்குட்டம் முதலிய கர்ம வியாதியையும் அனுபவிக்கிறாள்.

## மனுதர்மம் - அத்தியாயம் 9

**சுலோகம் 14:** மாதர் ஆடவரிடத்தில் அழகையும், பருவத்தையும் விரும்பாமலே ஆண் தன்மையை மாத்திரம் முக்கியமாக வேண்டி அவர்களைப் புணருகிறார்கள்.

**சுலோகம் 15:** மாதர்கள் கற்பு நிலையின்மையும், நிலையா மனமும், நண்பின்மையும், இயற்கையாகவுடையவராதலால் கணவனாற் காக்கப்பட்டிருப்பினும் அவர்களை விரோதிக்கின்றார்கள்.

**சுலோகம் 17:** படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவற்றினை மாதர் பொருட்டே மனுவானவர் கற்பித்தார்.

**சுலோகம் 18:** மாதர்களுக்கு ஜாதகர்ம முதலியவை மந்திரத்தோடு கிடையாது. மனச்சுத்தியுங் கிடையாது. பாவத்தைப் போக்குகிற மந்திரோபதேசமுமில்லை.ஆகையால்அபரிசுத்தாளாயிருக்கிறார்கள்.

**சுலோகம் 19:** மாதர்கள் பெரும்பாலும் விபச்சார தோஷ முள்ளவர்களென்று அநேக சுருதிகளிலுஞ் சாஸ்திரங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு திருஷ்டாந்திரமாக அந்த விபச்சாரத்துக்கு சுருதியில் சொல்லிய பிரயாச் சித்தத்தைக் கேளுங்கள்.

**சுலோகம் 30 :** கணவன் சொற்படி நடவாதவள் உலகத் தாரால் நிந்திக்கப்பட்டு நரியாய்ப் பிறந்து பாவப் பிணியால் வருந்துவாள்.

**சுலோகம் 46:** கணவன் மனையாளைத் தள்ளிவிட்டாலும், விற்றாலும் அந்த மனையாள் தன்மை அவளை விட்டு நீங்காது. இப்படி இவர்களுக்கு பிரமன் சிருஷ்டி காலத்திலேயே ஏற்படுத்தியிருக்கிற சாசுவதமான தருமத்தை நாமறிந்திருக்கிறோம். ஆதலாலிவ்விதமான பிறன்மனையாளிடத்தில் பிறந்த பிள்ளையும் உபயோகப்படமாட்டான்.

**சுலோகம் 52:** ஒருவனுக்கு நிலமில்லாமல் வித்துள்ளவனாயிருந்தால்

மற்றுமொருவனையடைந்து உன்னிலத்தில் நான் பயிரிடுகிறேன். அப்பயிர் நம்மிருவருக்கும் பொதுவாயிருக்கட்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டு பயிரிடுகிறார்ப்போல் ஒருவன் மனையாளிடத்தில் மனையாளில்லாத மற்றொருவன் பிள்ளையையும் உண்டு பண்ணலாம். அந்த வேற்பாடு இல்லாவிட்டால் உடையவனைச் சாருமென்பது பிரத்திய கூலமாகவே யிருக்கிறது. ஏனெனில் பிஜத்தை விட நிலமுயர்ந்ததல்லவா?

**சுலோகம் 53:** நில விஷயத்தைப் போல் மாதர் விஷயத்திலும், கணவனும் மற்றொருவனும், பயிரைக் குறித்தாற்போல் புத்திரவுற்பத்தியைக் குறிக்கும் ஏற்பாடு செய்து கொண்டால் அதில் விளைகிற தானியம்போல் பிறந்த பிள்ளையும் இருவருக்கும் சொந்தமாகவிருப்பதை உலகத்திற் கண்டிருக்கிறோம்.

**சுலோகம் 59:** பிள்ளையில்லாமல் அந்தக்குலம் நசிக்கிறதாக விருந்தால் அப்போதந்த ஸ்திரி தன் கணவன், மாமனார் முதலானவர்களின் உத்தரவு பெற்றுக் கொண்டு தன் மைத்துனன் அல்லது தன் கணவனுக்கு ஏழு தலைமுறைக்குட்பட்ட பங்காளி இவர்களோடு மேற்சொல் லுகிறபடி புணர்ந்து குலத்திற்குத் தக்கதான ஒரு பிள்ளையை பெற்றுக் கொள்ளலாம்.

**சுலோகம் 60:** விதவையிடத்தில் பெரியோர்களின் அனுமதிப் பெற்றுக் கொண்டு புணரப்போகிறவன் தன் தேகமெங்கும் நெய்யைப் பூசிக்கொண்டு இரவில் இருட்டான இடத்தில் அவளைப் புணர்ந்து ஒரே பிள்ளையை உண்டுபண்ண வேண்டியது. இரண்டாம் பிள்ளையை ஒரு போதும் உண்டு பண்ணக்கூடாது.

**சுலோகம் 69:** ஒரு பெண்ணை ஒருவனுக்குக் கொடுக்கிறதா உண்மையாக வாக்குத்தானம் செய்த பின் அந்த ஒருவன் இறந்துபோனால் அவன் தம்பி அல்லது அண்ணன் விவாகம் செய்து மேற்சொல்லும் விதிப்படி இருக்க வேண்டியது.

**சுலோகம் 70:** அவனந்தப் பெண்ணை விதிப்படி விவாகஞ் செய்து வெள்ளை வஸ்திரமுடையவளாயும், திரிகரண சுத்தியுடையவளாயு மிருக்கச் செய்து, ருதுஸ்நான மானவுடன் ஒரு நாள் புணர்ந்து மறுபடி ருதுகாலம் வரையிற் பார்த்து கருப்பமுண்டாகாவிடில் கருப்பமுண்டாகிறவரையில் அந்தந்த ருதுஸ்நானமானவுடன் ஒவ்வோர் நாள் புணர வேண்டியது.

**சுலோகம் 77:** கணவனை மனைவி பகைத்தால் அவன் ஒரு வருஷம் வரையிலும் பார்த்து அவள் வணங்காவிடில் அவளுக்குத் தான் கொடுத்த ஆடையாபரணம் முதலியவற்றை வாங்கிக் கொண்டு அவளோடு பேசுதலும், புணர்தலும் ஒழிக்க ஜீவனத்துக்காகக் கொடுத்தது கவரத் தக்கதன்று.

**சுலோகம் 78:** கணவன் சூதாடுகிறவனாயிருந்தாலும், குடிய னாகவிருந்தாலும், நோயாளியாக இருந்தாலும், அவனுக்கு மனைவி கர்வத்தால் பணிவிடை செய்யா விட்டால் அவளுக்கு அலங்காரம் வஸ்த்திரம் படுக்கை இவைகளைக் கொடாமல் மூன்று மாதம் நீக்கி வைக்க வேண்டியது.

**சுலோகம் 81:** மலடியான மனைவியை எட்டு வருஷத்திற்கு மேலும், சாப்பிள்ளை பெறுபவளை பத்து வருஷத்திற்கு மேலும், பெண்ணையே பெறுபவளை பதினொரு வருஷத்திற்கு மேலும், தீங்கு சொல்பவளை அப்பொழுதேயும் நீக்கி வேறு விவாகம் செய்து கொள்க. இந்த மனைவியர்களுக்கு மனமகிழ்ச்சிப் பொருள் கொடுக்க வேண்டியதில்லை.

**சுலோகம் 88:** குலம், நல்லொழுக்கம் இவைகளாலுயர்ந்தவனாயும், பெண்ணுக்குத் தக்க ரூபமுள்ளவனாயும், தன் ஜாதிக்குத் தக்க ஜாதியுள்ளவனாயுமிருக்கிறவானுக்கு தனது பெண் எட்டு வயதுக்குட்பட்டிருந்தாலும், விதிப்படி விவாகம் செய்து கொடுத்து விடலாம்.

**சுலோகம் 94:** முப்பது வயதுள்ள வரன் அழகான பன்னிரெண்டு வயதுள்ள பெண்ணையும், இருபத்திநாலு வயதுள்ள வரன் எட்டு வயது பெண்ணையும் விவாகம் செய்து கொள்ளலாம். இதற்கு முன் விவாகம் செய்து கொள்ள அவசரப்பட்டால் வேதமோதல் முதலிய தர்ம காரியம் கெடும். அதனால் பின்பு துக்கப்படுவான்.

**- மேற்கண்ட சான்றுகள் 1919இல் வெளியிடப்பட்ட திருவைந்திபுரம், கோமாண்டூர், இளைய வில்லி இராமாநுஜாசாரியாரால் மொழிபெயர்க்கப்பட்ட 'அசல்மனுதரும சாஸ்திரம்' நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.**

# பாரதத்தில் பெண்ணடிமைக் கருத்துகள்

### 1. புகழ் பெற்ற உத்தமி

ருதுவாவதற்கு முன் பிராம்மம் முதலான விவாஹங்களுள் (ஒன்றால்) விதிப்படி விவாஹம் செய்யப்பட்டவளுமான கன்னிகையானவள் புகழ் பெற்ற உத்தமியாவாள்.

**ஆஸ்வமேதிக பர்வம் - அத்யாயம் - 99, பக்கம் 282**

### 2. குருதாரம், பரதாரத்தைப் புணருதல்
### வியாசர் - தருமருக்கு

குருவின் கட்டளைப்படி குருதாரத்தைச் சேருவதால் மனிதன் குற்றமுள்ளவனாக மாட்டான். தமையன் பதிதனாகவும், ஸந்யாசியாகவும் போய் விட்டால் தம்பிக்கு பாரிவித்தியமென்னும் தோஷமாகாது. தர்மநிமித்தம் ஸ்திரிகளின் வேண்டுகோளின்படி அவர்களைச் சேருதல் பரதாரத்தைச் சேர்ந்த பாவமாகாது.

**சாந்தி பர்வம் - அத்தியாயம் 83, பக்கம் 112-113**

### 3. பெண் உரிமை மறுத்தல்

**சகுந்தலை**

இளமையில் பிதா காப்பாற்றுகிறான். பருவகாலத்தில் கொழுநன் காப்பாற்றுகிறான். முதிர்ந்த பிராயத்தில் புத்திரன் காப்பாற்றுகிறான். ஸ்திரி ஸ்வந்திரமாய் இருக்கத்தக்கவள் அல்லள்.

**ஆதிபர்வம் - அத்யாயம் 94, பக்கம் 341**

### 4. பெண்கள் உறவினர்களிடம் நெடுங்காலம் வசிக்கலாகாது

**சகுந்தலை**

பெண்கள் தம்மைச் சேர்ந்த உறவினர்களிடம் நெடுங்காலம் வஸிப்பது புகழையும் ஒழுக்கத்தையும் தர்மத்தையும் கெடுக்கும். அதில் எனக்கு இஷ்ட மில்லை (உடன்பாடில்லை).

**ஆதிபர்வம் - அத்யாயம் 96, பக்கம் 352**

### 5. துஷ்யந்தன் பெண்களை ஏசியது

உலகத்தில் பெண்களனைவரும் கொடியவர்கள்; காமத்தை முக்கியமாகக் கொண்டவர்கள். எல்லாப் பெண்களும் அயலாருக்குட் படுகிறவர்கள். எல்லாரும் கோபத்தை மேற்கொண்டவர்கள். பெண்களெல்லாரும் பொய்

சொல்லுகிறவர்கள். கண்ணுவரைப்பற்றி நீ பேசத்தகாது. உன் தாயாராகிய மேனகை தயை யற்றவள் வியபிசாரி அவள் உன்னை இமயமலைச் சரிவில் நிர்மாலியத்தைப்போல் எறிந்துவிட்டாள் அல்லவா?

(நிர்மாலியம் = தேவதைகள் பூஜித்து கழித்த பொருள் - குப்பை)

**ஆதிபர்வம் - அத்யாயம் 98, பக்கம் 365**

### 6. பாண்டு குந்திக்குக் கூறிய [அ]தர்மம்

ராஜபுத்திரியே! பதிவ்ரதையே! ஒவ்வொரு ருதுகாலங்களில் மட்டும் ஸ்திரி கணவனை மீறி நடக்கக் கூடாதென்பதே தர்மமென்றும், மற்ற காலங்கள் எல்லாவற்றிலும் பெண் தன் இஷ்டப்படி நடப்பதற் குரியவளென்றும் தர்மந்தெரிந்தவர்கள் அறிகின்றனர். ஸாது ஜனங்கள் இவ்வாறாகவே பழைய காலத்துத் வதர்மமிருப்பதாக நிச்சயித்திருக்கின்றனர். ராஜபுத்திரியே! தர்மமோ அதர்மமோ எதைப் பாரியைக்குப் பர்த்தா சொல்வதோ அதை அவள் செய்ய வேண்டுமென்று வேதந்தெரிந்தவர்கள் நிச்சயித்திருக்கின்றனர்.

என் கட்டளையினால் தவத்திற் சிறந்த பிராம்மணனைக்கொண்டு குணங்கள் நிரம்பின புத்திரங்களை உண்டாக்கிக் கொள்வதற்கு உரியவளாகிறாய்! (ஸாது ஜனம்: = பார்ப்பனர்)

**ஆதிபர்வம் - அத்யாயம் 128, பக்கம் 469-470**

### 7. புருஷனில்லா ஸ்திரி
### கணவனுக்கு முன் இறக்கும் பெண்

தரையிற் போடப்பட்ட மாம்ஸத்தைப் பறவைகள் எவ்வாறு விரும்புகின்றனவோ அவ்வாறே புருஷனில்லாத ஸ்திரியை எல்லா ஜனங்களும் விரும்புகின்றனர். பிராமணோத்தமரே! புருஷனில்லாமல் கெட்டவர்களால் விரும்பப்பட்டு மனம் தடுமாறும்படி செய்யப்பட்ட நான் ஸாதுஜனங்கள் ஒப்பினமார்க்கத்தில் நிற்கச் சக்தியுள்ள வளாக மாட்டேன். நாதரே! துஷ்ட ஜனங்கள் மிகுந்த இவ்வுலகத்தில் பெண் ஜன்மம் இழி (கெட்ட) வானது. கன்னிகையாயிருக்கும் போது தாய் தந்தையர் வசத்திலும், விவாகமானபின் (திருமணம்) பர்த்தாவின் வசத்திலும், இவர்களில்லாதபோது புத்திரன் வசத்திலும் இருக்கவேண்டும். ஸ்வதந்திரையான ஸ்திரி இகழப்பட்டவள். நெய்யில் நனைக்கப்பட்ட வஸ்திரத்துண்டு நாய்களால் எப்படியிழுக்கப் படுகிறதோ அப்படி பெண்களுக்கு நாதனில்லாமலிருப்பது (கணவன்) துஷ்டர்களுக்கு (கெட்டவர்) வாயில் திறந்துவிட்டது போல் அல்லவா?

ஓ! பிராமணரே! கணவனுக்குமுன் பரலோகமடைவது புத்ரனுள்ள ஸ்திரிகளுக்குப் பெரும்பாக்கியமென்று தர்சாஸ்திரஜ்ஞர்கள் அறிகின்றனர். இவ்வுலகத்தில் புத்திரர்கள் வசத்தில் திரிவது விரும்பத்தக்கதன்று. எவள் மஞ்சள், மை, புஷ்பம்பூ முதலிய ஸ்மங்கலி லக்ஷணங்களோடு கூடியவளாயிருந்து பர்த்தாவின் பாதங்களில் மனம் வைத்து அவன் கொடுத்த

தர்ப்பண ஜலத்தைப் பானஞ்செய்பவளாகப் பர்த்தா முன்னிலையில் மரணமடைகிறாளோ அவள் பார்வதிலோகத்தை அடைகிறாள். பார்வதிக்குத் தோழியாயிருந்து அந்தப் பர்வதராஜ கன்னிகையுடன் கூட மகிழ்ந்திருக்கிறாள்.

**ஆதிபர்வம் - அத்யாயம் 172, பக்கம் 641-642**

மேற்கண்ட மகாபாரதச் சான்றுகள் 1951இல் கும்பகோணம் ம.வீ.இராமானுஜா சாரியார் வெளியிட்ட ஆதிபர்வ பதிப்பில் இருந்து எடுக்கப்பட்டவை.

## கீதை என்ன சொல்லுகிறது?

**பெண்களும், வைஸ்யர்களும், சூத்திரர்களும் பாவ யோனியிலிருந்து பிறந்தவர்கள்** (Born out of the womb of sin)

**"மாம் ஹி பார்த்த வ்யாபாச்ரித்ய யேஸ்பி ஸ்யு: பாப-யோனய: ஸத்ரியோ வைச்யாஸ்-ததா சூத்ராஸ்-தே பி யாந்தி பராங்கதிம்"**

**(அத். 9 - சுலோகம் 32)**

## இந்துமதத்தில் பெண்கள் நிலை

- ஒரு கணவன் தன் மனைவியைத் தனக்குத் தொண்டு செய்யவும், பிள்ளைகளைப் பெறவும் கடவுளால் கொடுக்கப்பட்டவள் என்று அதர்வண வேதத்தில் உள்ள ஒரு பாட்டிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.
- மனிதனுக்கு இன்பத்தை அளிக்கவே-காம வேட்கையைத் தணிக்கவே பெண்கள் பிறந்திருக்கிறார்கள் என்று உபநிஷதர்கள் நினைத்து வந்திருக்கிறார்கள்.
- பெண்ணாய்ப் பிறப்பதைவிட கெட்ட பிறப்பு வேறு எதுவுமில்லை. எல்லாக் கேடுகளுக்கும் வேர் பெண்களே.


**- பாரதம், அனுசான்ய பருவம்**

பெண்ணைவிடப் பாவகரமான பிராணி வேறு இல்லை. பெண் எரிகிற நெருப்பு போன்றவள்; பெண் மாய்கை (வஞ்சக) குணமுள்ளவள், க்ஷவரக்கத்தியின் கூர்மையான பதம் போன்றவள். இவைகள் எல்லாம் உண்மையாகவே ஒரு பெண்ணின் தன்மையில் இருக்கின்றன.

**ஒரு பெண் தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தனது கணவனையோ, குழந்தைகளையோ, சகோதரர்களையோ யாரை வேண்டுமானாலும் கொலை செய்யத் தயங்கமாட்டாள். - பாகவத ஸ்கந்தம் 4.14.42**

பெண்கள் பாப ஜென்மங்கள், அவர்களுக்கு ஒழுக்கம் கிடையாது. பாதுகாக்கும் அளவுக்குத்தான் அவர்களிடம் ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியும் என்பது இந்து மதத்தின் கருத்தாகும்.

இப்பொழுது சொல்லுங்கள் - பெண்களைக் கேவலப்படுத்தும், இழிவுப்படுத்தும் இந்த இந்து மத சாஸ்திரங்களை **எரிக்கவேண்டுமா - வேண்டாமா?**



# மனுதர்ம சாஸ்திரம் பற்றி தந்தை பெரியார்

ஒரு ஜாதியார் தான் படிக்க வேண்டும். பார்ப்பனர் தான் படிக்க உரிமை உண்டு என்ற தத்துவம் கொண்டது தான் மனுதர்ம சாஸ்திரம். எவன் சூத்திரனுக்குப் படிப்புச் சொல்லித் தருகிறானோ அவனே பாவி. சூத்திரன் படித்தால் ஒழிந்தே போய்விடுவான் இதுதான் மனுதர்மத்தில் காணப்படுவது.

**- 'விடுதலை', 7.3.1954**

வேதமும் ஸ்மிருதிகளும் புராணமும்தான் இந்துமதம் என்பதோடு மனுதர்ம சாஸ்திரம்தான் இந்து மதத்திற்கு சாஸ்திரம் (சட்டம்) என்றும் சொல்லி, அதை நடப்பாக்கி வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் வருணாசிரம தர்மம் என்று ஒன்று இல்லாவிட்டால் இந்து மதம் என்று ஒன்று இல்லை என்றே சொல்லிவிடலாம்.

**- 'குடிஅரசு', 22.2.1947**

திருக்குறள் மனுதர்மத்திற்கு உண்மையான விரோதி நூல் என்றே திடமாகச் சொல்லலாம். மனுதர்ம சூத்திரங்களுக்கு நேர்மாறான கருத்துகளைக் கொண்ட குறள் அடிகளை ஏராளமாகத் திருக்குறலிலிருந்து எடுத்துக் காட்டலாம்.

**- 'விடுதலை', 5.11.1948**

மனுதர்ம சாஸ்திரக் கொள்கைகளையும், ஆரிய ஆதிக்கக் கொள்கைகளையும் கதை ரூபமாகவும், பக்தி ரூபமாகவும், கடவுள் செய்கை, கடவுள் வாக்குகள் ஆகியவை என்பதன் மூலமாகவும் திராவிடருக்குள் புகுத்த செய்யப்பட்ட சாதனங்கள் தாம் புராணங்கள் இதிகாசங்கள் முதலியவைகளும் தேவாரங்கள், திருவாசகங்கள், பிரபந்தங்கள் ஆகியவைகளும் ஆகும் என்பது என் கருத்து. இந்த கருத்துகளுக்கு உதாரணங்கள் அவைகளிலேயே இருக்கின்றன.

அவதாரம் விஷ்ணு அவதாரங்கள் அத்தனையும் ஆரியர்களின் எதிரிகளை அதாவது மனுதர்மத்துக்கு விரோதமாகவும், ஆரிய ஆதிக்கத்தை ஒழிக்கவும், தடுக்கவும் முயற்சித்தவர்களை கொல்லவும், அழிக்கவும், சதிசெய்யவும் ஏற்பட்டவைகள் தான்.

**- 'குடிஅரசு', 1.7.1944**

நாம் உருப்படியாக வேண்டுமானால் - நாமும் அறிவுள்ள மக்களாக ஆகவேண்டுமானால் நான் மேலே கூறிய கடவுள், மதம், சாஸ்திரம், கோயில், குளம் குட்டிச்சுவர் அத்தனையும் ஒழிக்க வேண்டும்.

நான் மட்டும் கூறவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரான டாக்டர் அம்பேத்கரும் இந்தக் கருத்தையே கூறியுள்ளார்.

அவர் இராமாயணத்தை, கீதையைக் கொளுத்தியவர்! கீதை பைத்தியக்காரனின் உளறல் என்று கூறியவர் ஆவார்.

மனுதருமத்தில் பார்ப்பான் எழுதி வைத்து இருக்கின்றான். சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வி என்று ஒன்றை மட்டும் அறவே கொடுக்கக் கூடாது என்றும் எழுதி வைத்து உள்ளான்.

மக்களிடம் பலவிதமான ஜாதிகளை ஏற்படுத்தி அதை நிலைக்கச் செய்ய - இன்ன இன்ன ஜாதி இன்ன இன்ன தொழில்தான் செய்ய வேண்டும்; ஜாதித் தொழிலுக்கு மாறாக நடந்தால் அரசன் அவனைத் தண்டிக்க வேண்டும் என்று எழுதிக் கொண்டார்கள்.

ஆனால், பார்ப்பான் தங்கள் வாழ்வுக்காக சூத்திரன் செய்யக் கூடிய தொழிலைச் செய்தாலும் அரசன் அவனைத் தண்டிக்கக் கூடாது என்று எழுதி வைத்துள்ளார்கள்.

**(15.5.1963 அன்று திருச்சிக்கு அடுத்த முத்தரசநல்லூர் பழுவூரில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய பேருரை) 'விடுதலை', 25.5.1963.**

**இராமாயணத்தில்...**

"மத்தளம், சூத்திரர், விலங்குகள், பெண்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்" – **இராமன், சுந்தரகாண்டம்**

# மனுதர்மத்தை அண்ணல் அம்பேத்கர் எரித்தது ஏன்?



1927 டிசம்பர் 25இல் மகாராஷ்டிரா மாநிலம் மகத் நகரில் கூடிய சத்தியாகிரகிகள் மாநாட்டில் “மநுஸ்மிருதியிலும் இவை போன்ற நூல்களிலும் கூறப்பட்டுள்ள விசயங்கள் நாகரிகமற்றவையாகவும் இழிவினும் இழிவானவையாகவும் உள்ளன. இதைக் கணக்கிலெடுத்துக் கொண்டு இக்கூட்டம் அவற்றை மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்தக் கண்டனத்துக்கு அறிகுறியாக அவற்றைத் தீயிட்டுக் கொளுத்த தீர்மானித்தது” என்று கூறி டாக்டர் அம்பேத்கர் தலைமையில் மனுஸ்மருதியை எரித்தனர்.

மகத் நகரின் சௌதார் குளம் ஜாதி இந்துக்களும் எல்லா ஜாதியினரின் விலங்குகளும் புழங்குவதற்குரியது. தலித்துகளுக்கோ புழங்குரிமை இல்லை. இத்தடையை நீக்குவதென 1924இல் நகரசபை எடுத்த முடிவை நிறைவேற்ற ஜாதி இந்துக்கள் விடவில்லை. 1927 மார்ச்

19, 20இல் மகத்தில் கூடிய மாநாட்டில் பங்கேற்ற தலித்துகளும் தலித் அல்லாதார் சிலரும் இரண்டாம்நாள் காலை அம்பேத்கர் தலைமையில் அந்தக் குளத்தில் நீரருந்தி நூற்றாண்டுக்காலத் தடையை உடைத்தனர். ஆத்திரமடைந்த ஜாதி இந்துக்கள், தலித்துகள் அடுத்ததாக வீரேஸ்வர் கோயிலுக்குள்ளும் நுழையப் போவதாக வதந்தியைக் கிளப்பி வன்முறையை ஏவினர். எமக்குள்ள இயல்பான உரிமைகளை நிலை நாட்டவே இந்தக் குளத்தில் இறங்கினோம். மற்றபடி இந்தத் தண்ணீர் அசாதாரண சிறப்பினை உடையதென நாங்கள் கருதவில்லை என்றார் அம்பேத்கர். ஜாதி இந்துக்களோ 108 கலயங்களில் பால், தயிர், மாட்டு மூத்திரம், சாணக்கழிசலை குளத்தில் ஊற்றி பரிகாரித்துத் தீட்டு கழித்தனர்.

இதனிடையே மகத் நகரசபை தலித்துகளை குளத்தில் புழங்கவிடும் முந்தைய தீர்மானத்தை 1927 ஆகஸ்ட் 4இல் ரத்து செய்தது. நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வந்த தலித்துகள் அங்கொரு சத்தியாகிரகத்தை 1927 டிசம்பர் 25, 26 தேதிகளில் நடத்துவதென தீர்மானித்தனர். மகத் சத்தியாக்கிரகம் வெறும் தண்ணீருக்கானது அல்ல என்பதை உணர்ந்த ஜாதி இந்துக்கள் நீதிமன்றத் தடையாணை பெற்றனர். இடம், தண்ணீர், மளிகைப்பொருட்களை வழங்க மறுத்தனர். ஆனால் ஃபதேகான் என்பவரது இடத்தில் திட்டமிட்டபடி மாநாடு தொடங்கியது. இருண்டகாலத்தில் இயற்றப்பட்ட சாஸ்திரங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் நாம் கட்டுப்பட்டிருக்க வேண்டியதில்லை என்கிற அம்பேத்கரின் பதிலுரையால் மக்கள் ஆவேசமுற்றனர். சகஸ்திரபுத்தே என்கிற பார்ப்பனர், சூத்திரர்களுக்கான நியதிகள் குறித்து மநுஸ்மிருதியில் கூறப்பட்டுள்ளதை படித்துக் காட்டி அம்பேத்கரின் கருத்துக்கு வலு சேர்த்தார். இந்தப் பின்னணியிலேயே மநுஸ்மிருதி எரிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளில் முன்னின்ற தோழர் ராம்சந்திர பாபாஜி மோரே பின்னாளில் தீரமிக்க மார்க்சிஸ்ட்டாக வாழ்ந்தவர். இறுதி வரையிலும் அம்பேத்கருடன் மாறாத்தோழமை கொண்டிருந்தவர்.

மநுஸ்மிருதியை கொளுத்தி சாம்பலை கடலில் கரைத்துவிட வேண்டும் என்கிற முதல் கலகக்குரல் 17.10.1927இல் காட்பாடியில் நடந்த ஆதிதிராவிடர் மாநாட்டில் எம்.சி. ராஜாவிடமிருந்து வெடித்தது. மகத்துக்கும் முன்னதாகவே 4.12.1927இல் குடியாத்தத்தில் கூடிய சுயமரியாதைக்காரர் மாநாட்டில் ஜே.எஸ்.கண்ணப்பர் மநுஸ்மிருதியைக் கொளுத்தினார்.

மகத்தில் மநுஸ்மிருதி எரிக்கப்பட்டதால் நாடே அதிர்ந்தது. காலவழிக்கொழிந்து போன மநுஸ்மிருதியை எரித்திருக்க வேண்டுமா என்ற தந்திரமான கேள்விக்கு, இந்த அங்கலாய்ப்பே அதன் இருப்பை உணர்த்துகிறது என்றார் அம்பேத்கர். இந்த எரிப்பினால் என்ன கிடைத்தது என்ற கேள்விக்கு ‘அந்நியத்துணி எரிப்பினால் காந்திக்கு எது கிடைத்ததோ அதுவே...’ என்றார்.

நிம்மதியிழந்த பார்ப்பன பத்திரிகைகளால் பீமாசுரன் என்று இகழப்பட்ட அம்பேத்கர் சொன்னார்: மநுஸ்மிருதி எரிப்பு முற்றிலும் திட்டமிடப்பட்ட நிகழ்வே. நூற்றாண்டுகளாக எங்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியின் சின்னமாக மநுஸ்மிருதியைக் கருதியதாலேயே எரித்தோம். அதன் போதனையின் காரணமாகவே நாங்கள் கொத்தியெடுக்கும் கோரக்கொடுமைக்கு, வன்னெஞ்ச வறுமைக்கு உள்ளாகியுள்ளோம். எனவே அதற்கு எதிராக வரிந்துகட்டினோம். உயிர்களை பணயம் வைத்துப் போராட்டத்தில் இறங்கினோம், நினைத்ததைச் செய்துமுடித்தோம்...

விலங்குகளை பலியிடும் யாகங்களை நடத்தி தட்சணையாக பொருள் ஈட்டுவதே வேதமதம்; அதை எதிர்த்தெழுந்த பௌத்தம் அசோகரால் மகதத்தின் அரச மதமாக்கப்பட்டதால் உயிர்ப்பலி தடுக்கப்பட்டது. அரசு ரீதியான ஆதரவுகளை இழந்த பார்ப்பனர்கள் 140 ஆண்டுகள் புரோகிதத்தையும் வருமானத்தையும் அந்தஸ்தையும் இழந்தனர். அசோகமித்திரன், பத்ரி சேஷாத்திரி மொழியில் ஒடுக்கப்பட்டனர். உயிர்ப்பலியிலும் சோம யாகத்திலும் நம்பிக்கையுள்ள சாமவேதி பார்ப்பனனாகிய புஷ்யமித்திர சுங்கன் அசோகரது வழிவந்த பிருகத்ரதனைக் கொன்று கி.மு.185இல் ஆட்சியைக் கைப்பற்றினான். ஒவ்வொரு பிக்குவின் தலைக்கும் 100 பொற்காசுகள் விலைவைத்து கொல்லுவதாயிருந்தது அவனது பௌத்த வெறுப்பு. பார்ப்பனீயத்தின் வெற்றியாக அம்பேத்கரால் சுட்டப்படும் இவனது ஆட்சிக்காலத்தில் சுமதி பார்கவா என்பவரால் கி.மு. 170- கி.மு.150க்குள் எழுதப்பட்டதே மநுஸ்மிருதி.

பூமியின் கடவுள்களாக பார்ப்பனர்களை விதந்துரைத்த மநுஸ்மிருதி மற்றவர்களை கீழ்நிலைப்படுத்தியது. யாகங்களால் ஆயுளை நீட்டிக்கவும் ஆட்சியை விரிவாக்கவும் முடியும் என்கிற கட்டுக்கதைகளுக்கு இரையான சத்திரிய மன்னர்களால் அது

நாடெங்கும் பரவியது. இத்தனைக்கும் அது சத்திரியர்களை, பரசுராமனால் கொல்லப்பட்டவர்களின் விதவைகள் பார்ப்பனர் களுடன் கூடியதால் முறையற்று பிறந்தவர்களென இழிவுபடுத்தியது. பட்டத்து மகிஷியைக் கன்னிகழிப்பதையும் அது பார்ப்பனர்களின் உரிமையாக்கியது. பெண்கள் அனைவரையும் சூத்திரர்களையும் உயிர் வாழ்தலுக்கும் சுதந்திரத்துக்கும் மகிழ்ச்சியை நாடும் வாழ்விற்கும் உரிமையற்றவர்களாக மநுஸ்மிருதி மாற்றியதை அம்பலப்படுத்திய அம்பேத்கர் அதை கொளுத்துவதற்கு தலைமையேற்றது பொருத்தமானதுதான்.

ஒரு குறியீட்டுரீதியான எதிர்ப்பாக மநுஸ்மிருதியை எரித்த போராட்டத்தை குடிமக்கள் யாவரும் சமம் என்கிற ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்கித் தருவதுவரை அம்பேத்கர் முன்னெடுத்தார். அதேவேளையில் மநுஸ்மிருதிக்கு எதிராக கனன்றெரியும் நெருப்பின் உக்கிரத்தில்தான் இந்தச் சமத்துவத்தை எட்டமுடியும் என்று எச்சரித்தும் வந்தார்.

ஆர்.எஸ்.எஸ் மநுஸ்மிருதியை பகவான் மநு அருளிய சட்டமெனப் போற்றுகிறது. அதேவேளையில் அரவணைத்து நெரிக்கும் தந்திரத்தோடு அது மநுஸ்மிருதியை கொளுத்திய அம்பேத்கரை வணங்குவதாகவும் பசப்புகிறது. பட்டியல் ஜாதிகளின் பெயருக்கு முன்னே இந்து என்கிற சொல்லைச் சேர்க்கும் அது, தலித்துகள் இந்துக்களல்ல என நிறுவிய அம்பேத்கரை அவமதிக்கிறது. இந்த மோசடியை ஜோடிப்பதற்கான நூல்களைப் புளுகியுள்ள பிஜய் சங்கர் சாஸ்திரி, முற்காலத்தில் பிராமண சத்திரிய உயர் ஜாதியினரான இவர்கள் இஸ்லாமியராக மாற மறுத்ததால் வந்தேறிகளால் மலமள்ளும் இழிநிலைக்குத் தாழ்த்தப்பட்டனர் என்று திரிக்கிறார். அது மட்டுமல்லாது, மநுஸ்மிருதியை உயர்ஜாதியினரின் புனிதநூலென அம்பேத்கரே சொல்லியிருப்பதால் முன்னாள் உயர்ஜாதியினரான தலித்துகளும் மநுஸ் மிருதியை ஏற்கவேண்டும் என்றும் வாதிடுகிறார்.

**(ஆதவன் தீட்சண்யா எழுதிய**
**'மறுபடியும் கொளுத்துவோம் மநுஸ்மிருதியை' கட்டுரையிலிருந்து...)**

பகுத்தறிவு, சமூக நீதி, வாழ்வியல் அறிய படியுங்கள், படியுங்கள்...
விடுதலை உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடு www.viduthalai.in

கணவன் சூதாடுகிறவனாயிருந்தாலும், குடியனாக இருந்தாலும், நோயாளியாக இருந்தாலும், அவனுக்கு மனைவி கர்வத்தால் பணிவிடை செய்யா விட்டால் அவளுக்கு அலங்காரம் வஸ்த்திரம் படுக்கை இவைகளைக் கொடாமல் மூன்று மாதம் நீக்கி வைக்க வேண்டியது.

**மனுதர்மம் அத்தியாயம் 9, சுலோகம் 78**

படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவற்றினை மாதர் பொருட்டே மனுவானவர் கற்பித்தார்.

**மனுதர்மம் அத்தியாயம் 9, சுலோகம் 17**

உலகத்தில் பெண்களனைவரும் கொடியவர்கள்; காமத்தை முக்கியமாகக் கொண்டவர்கள். எல்லாப் பெண்களும் அயலாருக்கு உட்படுகிறவர்கள். எல்லாரும் கோபத்தை மேற்கொண்டவர்கள். பெண்களெல்லாரும் பொய் சொல்லுகிறவர்கள்.

**மகாபாரதம்-ஆதிபர்வம்-அத்யாயம் 98, பக்கம் 365**

9 997720 145160